Volume 1 Issue 1 December 2020 ISSN:

# தி. ஜானகிராமன் நாவல்களில் பெண்மை மதிப்புகள்

**முனைவர் பொன் சண்முகம்**

*தமிழ்த்துறைத் தலைவர், தூய தாமஸ் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு*

ஒரு படைப்பாளி தன் எழுத்துகளில் சமூகத்தை வெறுமனே படம்பிடிப்பதில்லை. உலகநோக்குக்கு ஏற்பவே தனது சமூகத்தை எழுத்தாளன் பிரதிபலிக்கின்றான். அந்தவகையில் ''மனிதவளத்தின்'' கூறுகளான பொருளாதார சுதந்திரம், வரதட்சனை முதலிய தலைப்புகளில் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

தி ஜானகிராமனின் 'அம்மா வந்தாள்', 'அமிர்தம்', 'அன்பே ஆரமுதே', 'உயிர்த்தேன்', 'செம்பருத்தி', 'நளபாகம்', 'மரப்பசு', 'மலர்மஞ்சம்', 'மோகமுள்' ஆகிய ஒன்பது நாவல்களும் அடி, கமலம், சிவஞானம் முதிய மூன்று குறுநாவல்களும் இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**பெண்மை மதிப்புகள் - விளக்கம்**

மதிப்புளகள் என்பது பெண்மை தொடர்பான திருமணம், ஒழுக்கம், கற்பு, விதவையர் நிலை, குடும்பம், ஆண் - பெண் உறவு, பொருளாதாரச் சுதந்திரம் வரதட்சணை - போன்றவையாகும். நவீகாலச் சமுதாயம் என்பது தனிப்பட்ட குடும்பங்களைக் கொண்ட பெருந்தொகையே என்கிறார் ஏங்கெல்ஸ். இதில் ஆண்மட்டுமே பொருளை ஈட்டுபவனாகிறான். பொருளை ஈட்டாத பெண் ஆணைச் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுகிறாள்.

**ஒழுக்கம் --- கற்பு**

கற்பு என்பதும் ஒழுக்கநெறி என்பதும் மத்தியதர வர்க்கத்தில் வற்புறுத்தப்படும் அளவுக்குக் கீழ்மட்டத்தில் வற்புறுத்தப்படவில்லை. ஒரு பெண் திருமணத்திற்கு அப்பாற்பட்டு பிற ஆண்களுடன் தொடர்பு கொள்வது மத்தியதரவர்க்கத்தில் மிகக்கடுமையாகக் கண்டிக்கப்படுகிறது. ஒழுக்கமீறல் என்பது தவறாகப் பேசப்பட்டாலும். பொருளாதாரத்தை மையமிட்டு அதிக பிரச்சினைகள் எழுவதில்லை. காரணம் இங்கு பெண்களும் பொருளை ஈட்டுகின்றனர். அன்றாட குடும்பச் செலவுக்கு இவர்கள் ஆண்களைச் சார்ந்து இருப்பதில்லை.

இதனால் வேறு உறவுகளால் ஆண்கள் குடும்பதைப் புறக்கணித்தாலும் குடும்பத்தினர் அதிகபாதிப்புக்குள்ளாவதில்லை.

நளபாகம் நாவலில் உழைப்புத்திறன் மிகுந்தசீராளி என்ற பெண் கதை பாத்திரம் தன் நோயாளிக் கணவனை விடுத்து மற்றொருவனுடன் தொடர்பு கொண்டபோது ஊரும் அவள் பக்கம் உள்ள நியாத்தை உணர்ந்து ஏற்றுக் கொள்கிறது. இவ்வாறே பால்விற்கும் சொர்ணமும் அவள் மருகளும் வேறொருவனுடன் தொடர்பு கொண்டதை ஒருபெரிய ஒழுக்கமீறலாகச் சுற்றி இருப்பவர்கள் பேசவில்லை.

'அன்பே ஆரமுதே' நாவலின் ஒன்பதுபேரை மணந்துகொண்டு மிக இன்பமாக வாழ்கிறான். வேலைக்காரன் ஏழுமலை ஒன்பது குடும்பத்தையும் தாங்கும் குடும்பபாரம் அவனிடம் இல்லை. முனைவிமார்கள் தாங்களாகவே உழைத்துச் சம்பாதித்துக் கொள்கின்றனர். ஒன்பது பேரும் அவன் தங்கள் வீட்டுக்கு வரும்போது உபசரித்து கையில் காசும் கொடுத்து அனுப்புகின்றனர்.

இதைப்போலவே இரண்டு மனைவியரோடு ஒரு ரிக்சாக்காரனால் வெற்றிகரமாக வாழமுடிகிறது. ஆனால் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த சுப்ரமணியம் (மோகமுள்) இரண்டு திருமணம் செய்து கொள்வதால் தீர்க்கமுடியாத பிரச்சினைகள் தோன்றுகின்றன. சுப்ரமணியம் இறந்த பிறகு இரண்டாவது

மனைவியும் அவளது மகள் யமுனாவும் சோற்றுக்கே திண்டாடுகிறார்கள். யமுனாவைத் திருமணம் செய்ய எவரும் முன்வரவில்லை.

“அம்மா வந்தாள்” நாவலில் வரும் அம்மாவின் ஒழுக்க மீறலால் அவள பிள்ளைகள் அனைவரும் அவளை வெறுத்து ஒதுக்குகின்றனர். சமூகம் இழிந்துப் பேசுகின்றது. மேல் தட்டு மக்களிடம் ஏற்படும் ஒழுக்கமீறல்கள் பெரும்பாலும் பணபலத்தால் இயங்குகின்ற கட்டற்ற உறவுகளாலேயே நிகழ்கின்றன. ஆகவே இவர்களது மதிப்புகள் மத்தியதர வர்க்கத்திலிருந்து வேறுபடுகிறது.

கற்பு என்பதைப் புனிதமானது என்றோ உடல் ஒழுக்கத்தோடு மட்டுமே சம்பந்தப்பட்ட ஒன்று என்றோ ஆசிரியர் காட்டவில்லை. இதிலிருந்து முற்றிலும் வேறான இலக்கணமொன்றைத் தருகிறார். உயிர்களிடத்து அன்பு, தயை, தான் என்ற உணர்வில்லாமல் அடக்கமாக இருத்தல் பிறர்மனம் புண்படாமல் பேசுதல் மனிதத் தன்மையோடு பழகுதல் போன்ற வற்றையே தி. ஜானகிராமன் கற்பு என்கிறார்.

### பெண் - பொருளாதா சுதந்திரம்

தி. ஜானகிராமனின் நாவல்களில் இடம்பெறம் பெண்களில் பெரும்பாலோர் நடுத்தரவர்க்கத்தைச் சார்ந்தவர்கள் கீழ்த்தட்டை சேர்ந்தவர்கள் சிறுபான்மையினரே. கீழ்மட்டத்தில் ஆணும் பெண்ணும் இணைந்து உழைப்பதையும் நடுத்தரவர்க்கத்தில் பெண் வீட்டு வேலைகளில் மட்டுமே ஈடுபடுவதையும் இவரது படைப்புகள் காட்டுகின்றன. பெண்கள் செய்யும் வீட்டு வேலைகள் ஆண்களின் வெளிவேலைகளைவிட இழிவானது அன்று என்று காட்டும் ஆசிரியர். நடுத்தரவர்க்கத்துப் பெண்கள் வேலைக்குச்சென்று பொருளீட்டுவது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. பெண்களைத்திறமை மிக்கவர்களாகப் படைத்துள்ள தி. ஜானகிராமன் அத்திறமைகள் அனைத்தும் குடும்பத்திற்குள்ளாகவே அடங்கிவிடுவதாகக் காட்டிஉள்ளார்.

“ஆண் - பெண் உறவும் பால் சுரண்டலுக்குத் தோதான ஒருகருவியாக ஆக்கப்பட்டால் அதற்கான மரபுகள் கோட்பாடுகள் எல்லாம் அழியவோ மாற்றப்படவோதான் வேண்டும்[1] என்கிறார். ஆக, பெண் குடும்ப எல்லையைத்தாண்டி வெளியேவர வேண்டுமென்று தி.ஜானகிராமனின் கதைகள் நமக்கு உணர்த்துகிறன.

### வரதட்சணை

வரதட்சணை பிரச்சினை குறித்து தி. ஜானகிராமனின் கருத்து தெளிவாக இல்லை. இப்பிரச்சினையை சமூகவியல் நோக்கில் காண அவர் தவறிவிட்டார். ‘மோகமுள்’ நாவலில் கதைக் கருவோடு தொடர்பில்லை எனினும் இப்பிரச்சினைத் தொட்டுக்காட்டப்படுகிறது. நான்கு பவுன் நகை குறைத்துப் போட்டதற்காக சாந்திகல்யாணம் கூட முடிக்காமல் ஒருமாப்பிள்ளை பெண்ணை பிறந்த வீட்டிற்கு அனுப்பி விடுகிறான். ஒருவகையில் இது மிகப்பெரிய மதிப்பு மீறல். திருமணமான பின் கணவனுடன் வாழாத பெண்களுக்கு இச்சமூகம் சூட்டும் ‘வாழாவெட்டி’ பட்டத்தை பிற தூற்றுதல்களையும் கண்டு கொள்ளாமல் பெண்கள் துணிவுடன் இருக்கவேண்டும் என்கிறார் தி. ஜானகிராமன்.

### முடிவுகள்

1. ஒரு சமூகத்தின் பொருளாதார அமைப்பு தோற்றுவிக்கும் சமூக உறவுகளின் அடிப்படையில் எழுந்து அம்மக்களால் பேணப்பட்டு வரும் எண்ணங்கள் ஒழுக்கவிதிகள் சமூகச்சட்டங்கள் ஆகியவை அச்சமூகத்தின் மதிப்புகள் எனப்படும்.
2. ஜானகிராமன் வர்க்கங்களுக்கிடையே மதிப்புகள் வேறுபடுவதை உணர்ந்து அதனைத் தனது படைப்புகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

3. ஒழுக்கம், கற்பு போன்ற பெண்மை மதிப்புகள் நடுத்தரவர்க்கத்தில் மட்டுமே போற்றப்படுவதையும் மேல்மட்டத்திலும் கீழ்மட்டத்திலும் இவை அர்த்தமற்றுப் போவதையும் தி. ஜானகிராமன் காட்டுகிறார்.
4. கற்பு என்பது உடல் ரீதியானதல்ல. தூய அன்பும் மனிதத் தன்மையுமே கற்பு என்கிறார் தி. ஜானகிராமன். திருமணத்திற்குப் புறம்பான பாலுறவுகளை அவர்எதிர்க்கவில்லை. நியாயமான சூழல்களில் அதில் தவறில்லை என்று கருதுகிறார்.
5. தி. ஜானகிராமன் நாவல்களில் வரதட்ணைக்குத் தனிமனிதத் தீர்வே கூறப்படுகிறது. இப்பிரச்சினை சமூக இயங்கியல் நோக்கில் ஆராயப்படவில்லை.

**அடிக்குறிப்பு**

1. மாணிக்கம் மு., தி.ஜானகிராமன் நாவல்கள், ப.66.